வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் நாராயணசாமி

தேதி 2.3.2021 நேரம் மாலை 6 மணி

---

தலைப்புச்செய்திகள்

- உலகின் முன்னணி நீல பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- புதுச்சேரியில் மூத்த ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு புதிய பொறுப்புகளை வழங்கி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் உத்தரவிட்டுள்ளார்.

- அண ்டை மாநிலங்களில் கொரோனா பெருந்தொற்று அதிகரித்து வருவதால் புதுச்சேரி மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் மோகன்குமார் வலியுறுத்தியுள்ளார் .

- கணக்கில் காட்டப்படாத பணம் மற்றும் தங ்க நகைகளை தேர்தலுக்கென பதுக்கி வைத்திருப்பவர்கள் பற்றிய தகவலை தருமாறு வருமான வரித்துறை அறிவிப்பு

பிரதமர் கடல் சார் 1

நாட்டின் கடல்சார்கட்டமைப்பை பல்வேறு சீர்திருத்தங்களுடன் உலகத்தரத்திற்குமுன்னெடுத்துச் செல்ல அரசு உயர்முன்னுரிமை வழங்கி வருவதாக, பிரதமர்திருநரேந்திரமோடி. தெரிவித்திருக்கிறார்.உலகின் முன்னணி நீல பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இரண்டாவது இந்திய கடல்சார்உச்சிமாநாடு -2021-யை காணொலிமூலம் இன்றுதொடங்கிவைத்து பேசிய அவர்,கடல்சார்பிரிவில் இந்தியா இயற்கையாக தலைமைவகிப்பதால், இதுசார்ந்த பொருளாதார வளர்ச்சியில் பெரும் வெற்றியை எட்டும் என்றும் அவர் நம்பிக்கைவெளியிட்டார்.

துறைமுக பிரிவில் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம், கடல்சார்வளர்ச்சியைமுன்னெடுத்துச் செல்ல பல்வேறு திட்டங்களை மேற்கொள்வதாக கூறிய அவர்,இதன்ஒருபகுதியாக துறைமுகங்கள், கடலோர பொருளாதார மண்டலங்களுடன் இணைக்கப்பட்டு,துறைமுகம் சார்ந்த ஸ்மார்ட் நகரங்கள் உருவாக்கப்படுவதோடு, இத்துறைமுகங்கள் அருகே,உலகளாவிய உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருப்பதாக கூறினார்.

பிரதமர் கடல் சார் 2

31 பில்லியன் டாலர்முதலீடுகளை ஈர்க்கும் திறன் படைத்த 400-க்கும் மேற்பட்டதிட்டங்கள் பட்டியலை அரசு தயாரித்திருப்பதாக கூறிய பிரதமர், மேலும், 82 பில்லியன் டாலர் மதிப்பிலான 574 திட்டங்கள் கண்டறியப்பட்டு, சாஹர்மாலா திட்டத்தின் கீழ், அவைசெயல்படுத்தப்படும் என்றார். தீவு கட்டமைப்பு மேம்பாடு, மற்றும் அதுசார்ந்த சுற்றுச்சூழலை இணைத்து ஒட்டுமொத்தவளர்ச்சியை முன்னெடுத்துச்செல்லும் வகையில், புதுப்பிக்கப்பட்ட எரிசக்தி பயன்பாட்டை முக்கியதுறைமுகங்களில் ஏற்படுத்த அரசு முன்னுரிமை வழங்கி வருவதாகவும் பிரதமர் கூறினார்.

நம்நாட்டின் துறைமுகங்களில் தனியார்நிறுவனங்களும், உலகளாவிய நாடுகளும் முதலீடுசெய்ய பிரதமர்அழைப்பு விடுத்தார்.

3 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், கடல்சார்துறையில் நம் நாட்டைமுன்னெடுத்துச் செல்வதற்கான வழிமுறைகள் தொழில் வாய்ப்புகள், முதலீடுகள் உள்ளிட்டவைகுறித்து விரிவாக ஆராயப்படுகிறது .

## புதுச்சேரி ஆளுநர்

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் Dr. தமிழிசை சவுந்தர்ராஜன் இன்று மதியம், துணைநிலை ஆளுநரின் ஆலோசகர்கள் Dr. C. சந்திரமவுலி மற்றும் Dr. A.P. மகேஸ்வரி ஆகியோருடன் கலிதீர்த்தாள்குப்பம் அரசு மேனிலைப்பள்ளியில் மதிய உணவு வழங்குவதை பார்வையிட்டார்.

மாணவர்களுக்கு வழங்கப்பட இருந்த உணவின் தரத்தை துணை நிலை ஆளுநர் சுவைத்துப் பார்த்து சோதனை செய்தார். மேலும் இருப்பிலுள்ள அரிசி மற்றும் இதர பொருட்களையும் பார்வையிட்டார். சமையல் அறையை பார்வையிட்டு அதனைதூய்மையாக வைத்திருக்க அறிவுரை வழங்கினார்.

## புதுச்சேரி அதிகாரிகள்

புதுச்சேரியில் ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு பொறுப்புகளை மாற்றி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தராஜன் உத்தரவிட்டுள்ளார். இதன்படி திரு அசோக்குமார் தற்போது வகித்து வரும் பொறுப்புகளுடன் கூடுதலாக நிதித்துறை பொறுப்பு வகிப்பார். திருமதி ஆர். ஸ்மிதா கூடுதலாக வனத்துறை பொறுப்பு வகிப்பார். திரு சவுத்ரி அபிஜித் விஜய் கலால்துறை செயலாளராக கூடுதல் பொறுப்பை வகிப்பார்.

திரு ஏ விக்ராந்த் ராஜா பொதுப்பணி, மின்சாரம் மற்றும் சுற்றுலா துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார். தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுடன் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தலைமை செயலாளர் திரு அஸ்வனிகுமார் தெரிவித்துள்ளார்.

துணை நிலை ஆளுநர்

புதுச்சேரி கடற்கரை காந்தி திடலில் சுகாதாரத்துறை சார்பில் கொரோனா தடுப்பூசி விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறுகிறது. இதில் துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் பங்கேற்று விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கி வைக்கிறார்.

கோவிட் எண்ணிக்கை

நாட்டில் இதுவரை 1 கோடியே 48 லட்சம் பேருக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதே நேரம் கோவிட் தொற்றில் இருந்து குணமடைவோர் விகிதம் 97.07 சதவிகிதமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி கொரோனா

அண்டை மாநிலங்களில் கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்து, புதுச்சேரி மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று புதுச்சேரி சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் மோகன்குமார் கேட்டுக்கொண்டுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில்

(வாய்ஸ்)

முதியோர் தபால் வாக்கு

நடைபெற உள்ள புதுச்சேரி சட்டமன்றம் உள்ளிட்ட 5 மாநில சட்டமன்றத் தேர்தலின் போது,80 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு தபால் வாக்கு மூலம் வாக்களிக்க தேர்தல் ஆணையம் வாய்ப்பளித்துள்ளதன்படி80 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அவர்களின் விருப்பத்தின் பெயரில் தங்களின் வாக்குகளை தபால் மூலம் செலுத்தலாம் என்று காரைக்கால் தேர்தல் நடத்தும் அதிகாரி தெரிவித்துள்ளார் .

தபால் மூலம் வாக்களிக்க விருப்பம் தெரிவித்தவர்களுக்கு12D படிவம் வரும் 25 முதல் ஏப்ரல்4 ஆம் தேதிக்குள் இரண்டு தேர்தல் அலுவலர்கள், வாக்குச்சாவடி அலுவலர், காவல்துறை அலுவலர் மற்றும்

ஒளிப்பதிவாளர்கள் கொண்ட குழுவின் மூலம் விநியோகிக்கப்படும். மாற்றுத்திறனாளிகள் விருப்ப மனுவினை அந்த குழுவிடம் இருந்து பெற்றுக் கொண்டவுடன் தங்களது தபால் வாக்குகளை அளிக்க வேண்டும். தபால் ஓட்டுக்கான படிவத்தை அளிக்க வரும் நாள் மற்றும் நேரத்தினை 12D படிவத்தில் குறிப்பிட்டுள்ள அவர்களின் அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியாக தெரிவிக்கப்படும் என்று காரைக்கால் தேர்தல் நடத்தும் அதிகாரி அறிவித்துள்ளார்.

வருமான வரித்துறை

புதுச்சேரி தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலை நேர்மையாகவும், வெளிப்படையாகவும் நடத்தும் வகையில் கணக்கில் காட்டப்படாத பணத்தை தேர்தல் நடைமுறைகளுக்கு பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் விதமாக வருமான வரித்துறையின் உதவியை தேர்தல் ஆணையம் கோரியுள்ளது. இதையடுத்து, யாரேனும் கணக்கில் காட்டப்படாத பணம், நகை மற்றும் விலை உயர்ந்த பொருட்களை வைத்திருந்தால், அதுபற்றிய தகவலை 1800 425 6669 என்ற அழைப்பு கட்டணம் இல்லா தொலைபேசி எண்ணிற்கோ அல்லது 044 282 71915 என்ற பேக்ஸ் எண்ணிற்கோ அல்லது 94453 94453 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கோ அல்லது itcontrol.ch@gov.in என்ற இமெயில் முகவரிக்கோ தெரிவிக்கலாம் என்று

வருமான வரித்துறை புலனாய்வு பிரிவு கூடுதல் இயக்குனர் திரு பி.எஸ சிவசங்கரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

புதுக்கட்சி-தேர்தல் ஆணையம்

புதிதாக அரசியல் கட்சியை தொடங்குவதற்கு 30 நாள் அறிவிப்பு காலம் என்ற நிபந்தனை மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் உள்ளது. தற்போது உள்ள கோவிட் பெருந்தொற்று கட்டுப்பாடுகள் காரணமாக இந்த கால அவகாசம் புதிதாக கட்சி தொடங்குவதற்கு தடையாக உள்ளது என தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து, இந்த அறிவிப்பு காலத்தை 7 நாட்களாக குறைத்து இன்று உத்தரவிட்டுள்ளது.

புதுச்சேரி, தமிழகம் உள்ளிட்ட தேர்தலை சந்திக்க உள்ள 5 மாநிலங்களுக்கு இந்த புதிய விதிமுறை பொருந்தும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட்

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான நான்காவது - டெஸ்ட் கிரிக்கெட்போட்டி நாளை மறுநாள் அஹமதாபாதில்

தொடங்குகிறது.4 போட்டிகள் கொண்ட இத்தொடரில், இந்தியா, 2 - 1 என்ற கணக்கில் தற்போதுமுன்னிலையில் உள்ளது.

4-வது டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றிபெற்றாலோ, அல்லது டிரா செய்தாலோ,உலகக்கோப்பை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம், இந்திய நியூசிலாந்துஅணிகளுக்கு இடையே - .நடைபெறும்

மாறாக இங்கிலாந்து 4-வது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெறும் பட்சத்தில்,உலகக்கோப்பை டெஸ்ட் இறுதி ஆட்டத்தில், ஆஸ்திரேலியாவும் .நியூசிலாந்தும் களமிறங்கும் -

------------------------